# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# முதல் பத்து

## ஒன்பதாம் திருவாய்மொழி - இவையுமவையும்
## ஈச்வரன் பொறுக்கப் பொறுக்கத் தம் அவயவங்களோடு கலந்து அனுபவிப்பித்த கலவியை ஆழ்வார் அருளிச் செய்தல்

** இவையும் அவையும் உவையும் * இவரும் அவரும் உவரும் *
எவையும் யவரும் தன்னுள்ளே * ஆகியும் ஆக்கியும் காக்கும் **
அவையுள் தனி முதல் எம்மான் * கண்ணபிரான் என் அமுதம் *
சுவையன் திருவின் மணாளன் * என்னுடைச் சூழல் உளானே 1

சூழல் பல பல வல்லான் * தொல்லையம் காலத்து உலகை *
கேழல் ஒன்றாகி இடந்த * கேசவன் என்னுடை அம்மான் **
வேழ மருப்பை ஒசித்தான் * விண்ணவர்க்கு எண்ணல் அரியான் *
ஆழ நெடுங்கடல் சேர்ந்தான் * அவன் என் அருகலிலானே 2

அருகல் இலாய பெருஞ்சீர் * அமரர்கள் ஆதி முதல்வன் *
கருகிய நீல நன்மேனி வண்ணன் * செந்தாமரைக் கண்ணன் **
பொரு சிறைப் புள் உவந்து ஏறும் * பூமகளார் தனிக் கேள்வன் *
ஒரு கதியின் சுவை தந்திட்டு * ஒழிவிலன் என்னோடு உடனே 3

உடன் அமர் காதல் மகளிர் * திருமகள் மண்மகள் ஆயர்
மடமகள் * என்றிவர் மூவர் ஆளும் * உலகமும் மூன்றே **
உடன் அவை ஒக்க விழுங்கி * ஆலிலைச் சேர்ந்தவன் எம்மான் *
கடல் மலி மாயப் பெருமான் * கண்ணன் என் ஒக்கலையானே 4

ஒக்கலை வைத்து முலைப் பால் உண்ணென்று * தந்திட வாங்கி *
செக்கம் செக அன்று அவள் பால் * உயிர் செக உண்ட பெருமான் **
நக்க பிரானோடு * அயனும் இந்திரனும் முதலாக *
ஒக்கவும் தோற்றிய ஈசன் * மாயன் என் நெஞ்சின் உளானே 5

மாயன் என் நெஞ்சின் உள்ளன் * மற்றும் யவர்க்கும் அஃதே *
காயமும் சீவனும் தானே * காலும் எரியும் அவனே **
சேயன் அணியன் யவர்க்கும் * சிந்தைக்கும் கோசரம் அல்லன் *
தூயன் துயக்கன் மயக்கன் * என்னுடைத் தோளிணையானே 6

தோளிணை மேலும் நன்மார்பின் மேலும் * சுடர் முடி மேலும் *
தாளிணை மேலும் புனைந்த * தண்ணந்துழாய் உடை அம்மான் **
கேள் இணை ஒன்றும் இலாதான் * கிளரும் சுடர் ஒளி மூர்த்தி *
நாள் அணைந்து ஒன்றும் அகலான் * என்னுடை நாவின் உளானே 7

நாவினுள் நின்று மலரும் * ஞானக் கலைகளுக்கு எல்லாம் *
ஆவியும் ஆக்கையும் தானே * அழிப்போடு அளிப்பவன் தானே **
பூவியல் நால் தடந்தோளன் * பொரு படை ஆழி சங்கு ஏந்தும் *
காவி நன்மேனி கமலக் கண்ணன் * என் கண்ணின் உளானே 8

கமலக் கண்ணன் என் கண்ணின் உள்ளான் * காண்பன் அவன் கண்களாலே *
அமலங்கள் ஆக விழிக்கும் * ஐம்புலனும் அவன் மூர்த்தி **
கமலத்து அயன் நம்பி தன்னைக் * கண் நுதலானொடும் தோற்றி *
அமலத் தெய்வத்தோடு உலகம் ஆக்கி * என் நெற்றி உளானே 9

நெற்றியுள் நின்று என்னை ஆளும் * நிரை மலர்ப் பாதங்கள் சூடி *
கற்றைத் துழாய் முடிக் கோலக் * கண்ணபிரானைத் தொழுவார் **
ஒற்றைப் பிறை அணிந்தானும் * நான்முகனும் இந்திரனும் *
மற்றை அமரரும் எல்லாம் வந்து * எனது உச்சி உளானே 10

** உச்சி உள்ளே நிற்கும் தேவ தேவற்குக் * கண்ணபிராற்கு *
இச்சை உள் செல்ல உணர்த்தி * வண்குருகூர்ச் சடகோபன் **
இச்சொன்ன ஆயிரத்துள் * இவையும் ஓர் பத்து எம்பிராற்கு *
நிச்சலும் விண்ணப்பம் செய்ய * நீள் கழல் சென்னி பொருமே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---